**சுருக்கம்**

தொழில் – 2015–2016–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு–சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் குழாய்களில் ஏற்படும் பழுதினை தவிர்க்கும் பொருட்டு 2 பொதுத்துறை மற்றும் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள மேலேற்று குழாய்களில் எச்சரிக்கை ஒலிப்பானுடன் கூடிய தானியங்கி குவிப்பு தடுப்பு வால்வு (Auto Dump Valve) ரூ.72 இலட்சம் செலவில் நிறுவுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஜ.சி.1) துறை**

**அரசாணை (டி) எண்.172** **நாள் :18.09.2015**

மன்மத, புரட்டாசி –1

திருவள்ளுவர் ஆண்டு 2046

**ஆணை:**

2015–2016–ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு தொழில் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

“சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் குழாய்களில் ஏற்படும் பழுதினை தவிர்க்கும் பொருட்டு இரண்டு பொதுத்துறை மற்றும் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள மேலேற்று குழாய்களில் எச்சரிக்கை ஒலிப்பானுடன் கூடிய தானியங்கி குவிப்பு தடுப்பு வால்வு (Auto Dump Valve) ரூ.72 இலட்சம் செலவில் நிறுவுதல்”.

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளான (i)அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் (ii) பெரம்பலூர் சர்க்கரை ஆலை மற்றும் 10 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளான (i)செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை (ii)செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை (iii)தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை (iv)கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை (v)கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலை (vi)எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை (vii)தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை (viii)சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை (ix)சுப்ரமணியசிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் (x)வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளுக்கு தங்களது நிதியினைக் கொண்டு மேற்காணும் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்தும் மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் சர்க்கரைத் துறை இயக்குநரை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச.வி. சங்கர்**

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்

சர்க்கரைத் துறை இயக்குநர்,

690, அண்ணா சாலை, நந்தனம், சென்னை –35.

நகல்

மாண்புமிகு தொழில்துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.

தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1)துறை, சென்னை–600 009.

இ.கோப்பு/உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

ப. கலைச்செல்வி

**பிரிவு அலுவலர்** 18/9/2015